# ஹிஜ்ரத்

## ஓர் உன்னத சமூகத்தை இலக்காகக் கொண்ட பயணம்

எம்.ஏ.ஹபீழ் ஸலபி,ரியாதி (M.A.)

அங்கம் - 02

## ஹிஜ்ரத் ஒரு திருப்புமுனை

இஸ்லாமிய வரலாற்றில் ஏனைய நிகழ்வுகளுக்கு இல்லாத செல்வாக்கும் பாதிப்பும் ஏன் ஹிஜ்ரத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதனை அதனால் ஏற்பட்ட சமய, சமுதாய, அரசியல் விளைவுகளை வைத்தே தீர்மானித்துக் கொள்ளலாம். இதனாலேயே வரலாற்றாசிரியர்கள் ஹிஜ்ரத்தை ஒரு திருப்புமுனை என வர்ணித்தார்கள். இஸ்லாமிய வரலாற்றில் ஹிஜ்ரத்தினால் ஏற்பட்ட தாக்கங்களைப் பின்வருமாறு நோக்கலாம்.

### ஆன்மிக விளைவுகள்:

ஹிஜ்ரத்தானது ஆன்மிக ரீதியாக இஸ்லாமிய வரலாற்றில் பல விளைவுகளை ஏற்படுத்தியது. ஹிஜ்ரத்தின் செல்வாக்கை நோக்குகின்ற போது பல உதாரணங்களைக் கூறலாம்.

இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றான தொழுகை மக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் கூட்டான அமைப்பில் நிறைவேற்றப்படுகின்ற கடமையாக மதீனாவிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. கூட்டாக தொழுகை நிறைவேற்ற முடியாத இறுக்கமாக சூழல் காரணமாக மக்காவில் தனித்தனியான அமைப்பிலேயே முஸ்லிம்கள் அதனை நிறைவேற்றி வந்தனர்.

அத்தோடு, கூட்டுத்தொழுகைக்கான (அதான்) பாங்கு சொல்லி பள்ளிக்கு அனைவரையும் அழைக்கும் முறைமையும் மதீனாவிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. அதேபோல், புனித க.்.பா தொழுகைக்காக முன்னோக்கும் திசையாக அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்டதோடு, ஏனைய கூட்டுத் தொழுகைகளான ஜும்ஆத் தொழுகை, மைதானத்தில் ஆண்கள் - பெண்கள் அனைவரும் ஒன்றாகத் தொழும் இரு பெருநாட் தொழுகை போன்றவைகளும் ஹிஜ்ரத்திற்கு பின்னரே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வகையில் ஆன்மிகக் கடமைகளில் முக்கிய இடம்வகிக்கும் தொழுகையிலும் ஹிஜ்ரத் அதன் செல்வாக்கைச் செலுத்தியிருக்கிறது.

தொழுகைக்கு அடுத்த இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளான நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற கூட்டுக் கடமைகளும் அதற்கான சட்டவிதிகளும் ஒழுங்க முறைகளும் மதீனாவிலேயே அறிமுகப்படுத்தப்படடன. நோன்பு என்பது மக்கா காலப் பகுதியில் காணப்பட்ட வணக்கமாக இருந்தாலும் அது கூட்டமைப்பில் ஒரே மாதத்தில் நோற்கின்ற ஒரு வணக்கமாக இருக்கவில்லை.

ஸக்காத்தைப் பொறுத்தவரை ஆரம்ப காலத்தில் ஸகாத் என்ற அடிப்படையிலான ஒரு வணக்கமாக இருந்தாலும், சட்ட வரம்புகளைப் பேணிய ஒரு கட்டாய சமூகக் கடமையாக இருக்கவில்லை. ஸகாத் தொடர்பான சட்டவிதிகளும் ஒழுங்க முறைகளும் கூட்டாகச் சேகரித்து வினியோகிக்கும் நடைமுறையும் மதீனாவிலேயே அறிமுகப்படுத்தப்படடன.

ஹஜ்ஜுடைய நிலையும் இவ்வாறானதே. ஆக மேற்கூறப்பட்ட கூட்டுக் கடமைகள் கட்டாயக் கடமைகளாக, சட்டவரையறைகளைப் பேணியவைகளாக அருளப்பட்டது ஹிஜ்ரத்தின் பின்னரேயாகும்.

ஆன்மிக அனுஷ்டானங்களை நடைமுறைப்படுத்துவதோடு, அதனைப் பிரசாரம் செய்கின்ற முறைகளிலும் ஹிஜ்ரத்தின் பின்னர் பல மாற்றங்கள் ஏற்பட்டன. மக்கா காலப் பகுதியில் பிரசாரப் பணி பல நெருக்குவாரங்களுக்கு மத்தியில் வரையறுக்கப்பட்டதாகவே காணப்பட்டது. ஹிஜ்ரத்தின் பின்னர் இஸ்லாமியப் பிரசாரப் பணி விரிவடைவதற்கும், வெளி நாடுகளோடு தொடர்பு கொண்டு இஸ்லாத்தை எத்திவைப்பதற்கும் சாதகமான சூழல் ஏற்பட்டது.

மேற்படி சமய ரீதியான விளைவுகளை ஹிஜ்ரத் வழங்கியிருப்பதற்கு அங்கு நிலவிய கால சூழலே பாதிப்புச் செலுத்தியிருக்கின்றது என்பது தெளிவாகின்றது. ஆன்மிக வலுவுடன் கூடிய ஒரு சமூகம் கட்டமைக்கப்படவேண்டும் என்ற ஓர் இலக்கையே நபியவர்கள் கொண்டிருந்தார்கள். அதற்கு மதீனாவின் களம் பொருத்தமான பங்களிப்பை வழங்கியது.

## சமுதாய விளைவுகள்:

ஹிஜ்ரத் ஆன்மிக ரீதியான தனது செல்வாக்கைச் செலுத்தியது போன்று, சமுதாய ரீதியாகவும் தனது மகத்தான செல்வாக்கைச் செலுத்தியிருக்கின்றது.

மக்கா கால வாழ்வைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக பரந்திருந்தார்களே தவிர ஒரு சமூக அமைப்பாக கட்டியெழுப்பப்பட்டிருக்கவில்லை. அதற்கான சாதகமாக சூழல் அங்கு காணப்படவில்லை. ஆனால், ஹிஜ்ரத்தின் பின்னர் மதீனாவில் சமூக அமைப்பொன்று உருவாக்கப்பட்டது. அந்த சமூகக்கட்டமைப்பு போன்று வரலாற்றில் அதற்கு முன்னரும் பின்னரும் ஏற்படுத்தப்படாத ஒரு தனித்துவமான சமூகம்.

சமூக அமைப்புக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவேதான் சமுதாயச் சட்டங்கள், சமூகக் கூட்டுறவுக்கான வழிகாட்டல்கள், பரிபாலன ஒழுங்குகள், கல்விக்கொள்கைகள், குண ஒழுங்குகள் போன்ற வழிகாட்டல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அறிவு ஆளுமையற்ற சமூகம் நிலைத்து நிற்க முடியாது. சமூகத்தை அறிவு வழியில் கட்டமைக்கவேண்டும் என்பதற்காக Recidancial University உருவாக்கப்பட்டது. மதீனாவில் நபியவர்கய் நிர்மானித்த பள்ளியிலேயே பல்கலைக்கழகத்தையும் அமைத்தார்கள்.

விவாகம், விவாகரத்து, குழந்தை வளர்ப்பு, பாகப் பிரிவினை, வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் போன்ற சமுதாயச் சட்டங்கள் அங்கே அறிமுகப்படுத்தப்பட்டன.

அத்தோடு, சமூக அமைப்பைப் பாதுகாக்கும் முறையில் தமது உறவினர்களையும், உடமைகளையும் தாம் ஏற்றுக் கொண்ட உயரிய கொள்கைக்காக விட்டுவிட்டு தமது அடுத்தகட்ட வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு எந்தவித உத்திரவாதமும் இல்லாத நிலையில் ஹிஜ்ரத் சென்ற முஹாஜிர்களையும் தமது எல்லா விடயங்களையும் இஸ்லாத்துக்காகவே அர்ப்பணிப்போம் என்று உறுதிபூண்டிருந்த அன்ஸார்களையும் சகோதரர்களாக, அத்யந்தமான உறவுக்காரர்களாக நபி (ஸல்) அவர்கள் பிணைத்து விட்டார்கள். வேள்ளையனையும் வேற்று நிரத்தவர்களையும் ஒருகோட்டில் நிற்கவைத்தது வரலாற்றில் இன்று வரை மிகப் பெரிய சாதகைனயாக நோக்கப்படுகிறது.

மதீனாவில் பல வருடங்களாகப் பிரிந்து, பிரச்சினைப் பட்டுக்கொண்டிருந்த ‘‘அவ்ஸ்’’, ‘‘கஸ்ரஜ்’’ கோத்திரத்தினரின் பகைமை உணர்வுகளை நீக்கிவிட்டு, அவர்களையும் வாஞ்சைமிகு சகோதரர்களாக இறுகப் பிணைத்துவிட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் உடன்படிக்கையின் மூலம் ஏனைய சமயங்களைச் சேர்ந்தவர்களுக்கும் ஜனநாயக வழியில் பூரண சுதந்திரம் வழங்கி தமது தலைமைத்துவத்தின் கீழ் இணைத்துக்கொண்டார்கள். அத்தோடு, யூத கிறிஸ்தவர்களுடனான ஒப்பந்தங்கள் போன்றவைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

மேலும் சமுதாய அமைப்பை தொடர்ந்து பேணிப் பாதுகாப்பதற்கான நோன்பு, ஸக்காத், ஹஜ், ஜும்ஆ, ஜமாஅத் தொழுகை, பெருநாள் தொழுகைகள் போன்றவைகளும் குற்றவியல் தண்டனைகளும் அறிமுகமாயின.

இவ்வாறு உருவாக்கப்பட்ட சமுதாயத்தின் தியாகத்தைப் பரிசோதிப்பதற்காகவும் இதன் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தி, அதன் மூலம் சுயநிர்ணயத்தை உறுதிப்படுத்துவதற்காகவும் போர்ப் பயிற்சிகள் வழங்கப்பட்டு, யுத்தப் பிரகடனங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவ்வாறு நோக்கும் போது, சமூக ரீதியாக பல மாற்றங்களையும், விளைவுகளையும் ஹிஜ்ரத் ஏற்படுத்தியிருக்கிறது.

## அரசியல் விளைவுகள்:

ஹிஜ்ரத் நிகழ்ச்சி அரசியல் ரீதியாகவும் பல முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதை மறுத்துரைக்க முடியாது. இஸ்லாமியத் தலைமைத்துவம் அரசியல் ரீதியில் ஏற்பட்ட முக்கிய ஒரு மாற்றமாகும்.

மக்கா வரலாற்றில் இஸ்லாமிய சமூக அமைப்பொன்று உருவாகி இருக்காததால் அங்கு அரசியல் தலைமைத்துவமும் இருக்கவில்லை. அது தொடர்பான போதனைகளும் வழங்கப்படவில்லை. மாறாக அந்த உத்தேச அரசின் எதிர்வு கூறல்கள் மாத்திரமே இடம் பெற்றன.

ஆனால், ஹிஜ்ரத்தின் பின்னர் இஸ்லாமிய சமூக அமைப்பொன்று உருவானதால் அங்கு அரசியல் தலைமைத்துவத்தின் அதி முக்கிய தேவை உணரப்பட்டது. அந்த அரசின் தலைவராக நபி (ஸல்) அவர்கள்

காணப்பட்டார்கள். அவ்வரசின் தேசிய மதமாக இஸ்லாமும், அதன் யாப்புகளாக அல்குர்ஆனும், நபிவழியும் அவ்வரசின் தலை நகராக மதீனா நகரும் பிரகடனப்படுத்தப்பட்டன.

இவ்வரசின் செயலகமாக அல்லது உயர் பாராளுமன்றாக மஸ்ஜிதுந் நபவி விளங்கியது. இவ்வரசின் பாதுகாப்புக் கருதி குற்றவியல், விவாகரத்து, வியாபாரம், விடயங்கள் போன்ற சமுதாயச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அத்தோடு, இஸலாமிய ஜனநாயக அரசு என்ற ரீதியில் அதன் நலனைப் பாதுகாக்க அந்நியர்களோடு மதீனா சாசனம் உடன் கைச்சாத்திடப்பட்டது. பின்னர் ஹுதைபிய்யா போன்ற சாசனங்களும் உடன்படிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் தமது அரசினிலுள்ளும் வெளியிலும் வாழ்ந்த யூதக் கிருஸ்தவர்களோடு நல்லுறவுகளை வைத்துக் கொண்டதோடு, இஸ்லாமியப் பிரசார ரீதியாக வெளிநாடுகளுடனான ராஜதந்திர தொடர்புகளையும் வைத்துக் கொண்டார்கள். எனவே, இத்தகையதொரு அரசும் அதற்கான வழிகாட்டல்களும் அறிமுகப்படுத்தப்படுவதற்கு ஹிஜ்ரத்தே காரணமாக அமைந்தது. எனவேதான் அரசியல் ரீதியாகவும் அதனால் வரையப்பட்ட மதீனா சாசனத்தின் மூலம் பெரும்பான்மையோர் சிறுபான்மையோர் உறவு வலுப்படுத்தப்பட்டது. இஸ்லாமிய அரசு தோன்றியதன் பின்னர் அதனைக் கவிழ்த்து விடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட எல்லா சதி முயற்சிகளும் மிகத் துள்ளியமாகவும், வெற்றிகரமாகவும் முறியடிக்கப்பட்டதோடு, எதிர் சக்திகள் அனைத்தும் அணைபோட்டுத் தடுக்கப்பட்டன. பக்கத்து நாடுகளின் மன்னர், அரசர்களுக்கும் இஸ்லாத்தின் தூதும் அதனை ஏற்க வேண்டும் என்ற அழைப்பும் விடுக்கப்பட்டன. எனவேதான் அரசியல் ரீதியாகவும் ஹிஜ்ரத் ஒரு திருப்புமுனை எனப்படுகிறது.

எனவேதான் மதீனாவில் கட்டமைக்கப்பட்ட சமூக அமைப்புக்குத் தேவையான போதனைகளைத் தாங்கிவந்த அல்குர்ஆனுடைய அத்தியாயங்கள், வசனங்கள் மக்கிய வசனங்களிலிருந்து வேறுபட்டு அமைந்திருந்தன. ஹிஜ்ரத்திற்கு முன்னர் குறுகிய வசன நடை, இலக்கிய ரசனை கொண்ட அமைப்பில் அருளப்பட்ட திருக்குர்ஆனின் வசனங்கள் மதீனா ஹிஜ்ரத்தின் பின்னர் நீண்ட சட்ட விளங்கங்களை உள்ளடக்கிய அமைப்பில் அருளப்பட்டன. அத்தோடு ஈமானின், அடிப்படைப் போதனை கொண்டதாகவும் அமைந்திருக்க ஹிஜ்ரத்தின் பின் இறங்கிய மதனிய வசனங்களுள் மேற்கூறப்பட்ட விடயங்கள் ஓர் அளவு தவிர்க்கப்பட்டு, சட்டவிதிகள் அதிகம் உள்ளடங்கிக் காணப்பட்டன. ஒரு சமூகத்தின் சமய, சமுதாய, அரசியல் தேவைகளை நிறைவேற்ற வேண்டியிருந்ததால் அவைகள் நீண்டு காணப்பட்டன. எனவே, இந்த அடிப்படையில் நோக்குமிடத்து அல்குர்ஆனின் கருத்துப் போக்கிலும் அமைப்பிலும் ஹிஜ்ரத் மகத்தான மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஏழாம் நூற்றாண்டில் அரேபியாவிலும், உலகின் பல்வேறு பாகங்களிலும் காணப்பட்ட ஆட்சி அதிகாரங்களை பலமிழக்கச்செய்து, அவ்விடங்களில் கொள்கையிலும், சிந்தனைப் போக்கிலும், நோக்கத்திலும், அமைப்பிலும், நடைமுறையிலும், பழக்க வழக்கங்களிலும் முற்றிலும் வேறுபட்ட இஸ்லாமிய வாழ்வை அமைக்க நபியவர்கள் உள சுத்தியோடு மேற்கொண்ட இப்பயணத்தை மேற்கத்திய அறிஞர்கள் சிலர் வெறுமனே இடத்தை விட்டு இன்னோர் இடத்துக்கு இடம் பெயர்ந்த நிகழ்ச்சியாகவும், குடிபெயர்ச்சியாகவும் அடையாளம் காட்டுகின்றனர். ஆரிய, செமித்திய குடிபெயர்ப்புக்களோடு இதனை ஒப்பிடவும் அவர்கள் முயற்சிக்கின்றனர்.

ஆனால், உண்மை நிலையை ஆராய்ந்து, பக்க சார்பின்றிப் பார்க்கும் போது, இஸ்லாமிய சமூக அமைப்பையும், அரசியல் அமைப்பையும் கட்டியெழுப்புவதற்காக நபியவர்களும் அவர்களது தோழர்களும் மேற்கொண்ட ஒரு மகத்தான, மாபெரும் தியாகப் பயணமே இது. அத்தோடு இஸ்லாமிய வரலாற்றில் ஹிஜ்ரத்தானது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததும், உலக வரலாற்றில் ஒரு திருப்புமுனை என்பதும் எவ்வளவு நியாயமானது என்பது தெளிவானதே. வரலாற்றுப் போக்கையே மாற்றியமைத்த பெருமை ஹிஜ்ரத்திற்கு இருக்கிறது என்பது மறுத்துரைக்க முடியாத பேருண்மையாகும். இதை மேலும் வலுப்படுததும் வண்ணம் மதீனா சாசனம் அமைந்துள்ளது.

(இன்னும் வளரும்)